அடிகளாசிரியன்
வெளியீடு 3.

உ

முருகன் துணை

# பிள்ளைப் பாட்டு

1945

ஆக்கியோன்
வித்வான் திரு—அடிகளாசிரியன்
உதவித்தலைவன்,
ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி
மயிலம்

ஸ்ரீமத் ஞான இராசதானியான இரும்பொம்மையபாளையம் பெரியமடம் திருக்கயிலாய பரம்பரைச் சிவகஞ்சி மயூராசல நிவாச யதீச்சுரகர்த்தரான மயிலம் தேவஸ்தான ஆதின பரம்பரைத் தர்மகர்த்தத்துவம் இருந்தார் கஅ-வது பட்டத்து ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள், பார்த்திப புரட்டாசிக் கார்த்திகை விழாவில் முருகன் செந்தமிழ்க் கழகத்துத் தலைமைதாங்கி வீற்றிருந்து பிள்ளைப்பாட்டிற்குச் சூ யருளிய

## வாழ்த்துரை

அடிகளாசிரியர் இக்கழகத்து இதுபோழ்து விரிவுரை செய்த பிள்ளைப்பாட்டு ஒன்பதும், 'பாவெனப்படுவதுன் பாட்டு' என் சிறப்பித்துச் சொல்லும் பாட்டுகளைப் போலச் சிறந்தனவாம். ஒன்பது என்னும் எண்ணை எவ்வொன்றால் பெருக்கி அவற்றுட் காணப்படும் எண்களை ஒன்றோடொன்று கூட்டினால் அவ்வொன்பதே முடிந்த எண்ணாய் வரும்; அங்ஙனம் சிறந்த ஒன்பது என்னும் எண்ணால் இப்பிள்ளைப்பாட்டு முடிந்திருப்பதும் இதற்கோர் சிறப்பாகும். பழங்கால இலக்கியங்கள் சொற்சுவை பொருட்சுவை மலியச் சான்றோரால் இயற்றப்பெற்று, சங்கத்தில் அரங்கேற்றப் பெற்றதால் சங்க இலக்கியங்கள் எனப் பெயர் பெற்றன. இப்பிள்ளைப்பாட்டும் முருகன் செந்தமிழ்க்கழகத்து அரங்கேறியது. இதன் சொற்சுவை பொருட்சுவைகளை கேட்ட யாவரும் தம் நிலையை மறந்து முருகன் நிலை ஆயினார் ஆதலின், இப்பிள்ளைப்பாட்டு ஒன்பதும் இக்காலத்துச் சங்க இலக்கியங்கள் என்று கொண்டாடப் பெறத்தகுவனவாம். சின்னஞ்சிறு குழந்தைகளிடத்தில் தெய்வ ஆற்றல் விளங்குகின்றது. அக்குழந்தைகளைக் கண்டால் எவருடைய கல் நெஞ்சும் கரைந்து அன்புமயமாக ஆகும். அக்குழந்தைகளி தன்மையை இப்பாட்டு, குழந்தைமுருகனொடு கூட்டி ஆரா அமிழ்தம் போன்ற சுவையை நமக்கு ஊட்டுகின்றது. இக் காலத்தில் நிலவிவரும் 'கடவுள் உண்டு'; 'இல்லை' என்னுங் கொள்கையை வாதித்துக் கடவுள் உண்டு என்னுங் கொள்கையை நல்ல ஏதுக்களால் தெளிவாகக் கூறுகிறது.

ஒரு பாட்டுள், கந்தபுராணக் கதைகளனைத்தும் சுருக்கமாக அமைந்துள்ளன இப்பெரிய அரியகருத்துக்கள் அமைந்த பாக்களைப்பாடிய ரும் ஆசிரியர் தெய்வத்தன்மை உடையா ரென்பதில் எட்டுணையும் ஐயமின்று ஆகவே இப்பிள்ளைப் பாட்டும் தெய்வத்தன்மையுடையன இந்நூல் அனைவரி டத்தும் வருமாறு அச்சடித்து வெளியிடல் பொருளுடையார் கடமையர்கும். எனவே, இப்பிள்ளைப்பாட்டும் இப்பாட் டிற்கு ஏதுவாயிருந்த திரு-அ பேராசிரியனும் நீடூழி வாழ முருகனை வேண்டுகின்றோம்.

உ

மயிலம்

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரித்

தலைவர்

## மேன்மைதங்கிய, வித்துவான் S. துரைசாமி ஐயர்

அவர்கள் அளித்த

# சிறப்புப் பாட்டு.

1 முடிகொளும் வேந்தன் தெய்வ மெனக்கொளும் முதுநீர் (பண்ணைக்
கடிகொளும் குணசயூர் வாழும் கல்விசால் பெரிய சாமிப்
படிபுகழ் மகனுய்க் கல்வி பண்புசால் பமைந்த தோன்றல்
அடிகளா சிரிய னன்பால் அமைந்தவன் நூலோர் போற்ற.

2 விதக்குறை முடியோன் மைந்தன் மேவிய மயிலக் குன்றம்
மதுக்குலா மார்பர் பெண்டிர் மாண்சிறார் வணங்கற் (கேகும்
புதுச்செயல் தன்னை ஆன்ற பொருளொடு புணர்த்தி (வாழ்த்தி
புதுவதாய்ப் பொலியும் பிள்ளைப் பாட்டெனப் புதுக்கி (னைல்

3 கற்றறிந் தார்களேத்தும் கவியெனக் கண்டோர் சொல்ல
சொற்றெறிந் துரைத்தான் ஞான சொரூபியாம் பாலசித்த
விற்றெறி உருத்திராக்க மிகவொளிர் அடிகளார் முன்
கற்றறிந் தார்கள் வாழ்த்தக் கவிஞர வென்றும் வாழி.

உ

தமிழ் விரிவுரையாளர்; வித்துவான்

# உயர்திரு—சிவலிங்க முதலியாரவர்கள்

## பிள்ளைப்பாட்டிற்குக் கூறிய

# வழிமொழிப் பாட்டு

### பஃறாழிசைக் கொச்சகம் (தரவு)

புகழ்கோய முத்தூரார்ப் பொலிதாண்டாம் பாளையத்துள்
மகன்றிருபே ராசிரியன் மனம்நெகிழ அடைந்தசுரப்
பிணிநீங்கில் மயிலமமர் பெருமானே! இளஞ்சேயே!
அணிநீங்காப் பிள்ளைப்பாட் டணிவனினக் கெனவேண்டப்
பிணிநீங்கப் பெற்றுமனப் பெருமகிழ்வு கொண்டவன்நல்
அணிகுகையூர் வாழ்அடிக ளாசிரிய னெனும்புலவன்
வரங்கொண்ட முறைக்கேற்ப வகைபொன்பாங் செய்யுள் [கொடு
சிரங்கொள்ளப் புலவரெலாம் செய்தான்பிள் ளைப்பாட்டே.

### தாழிசை

1 ஆங்கொன்றில்,
மழலைமொழி புகன்றிடுநல் மழவினத்தைத் தாயரெலாம்
அழகுறுநற் றிருமுருகின் ஆலயத்தை விட்டிடலும்
அழகியதம் கைகுவித்த லாதியநல் விலைவிரித்தான்.

2 ஆங்கொன்றில்,
பேசுறுநற் றிறம்வளரும் பிள்ளைமையச் சிறுவர்பலர்
ஈசனருள் மகன்முருகின் இனியதிறம் பலவினவப்
பாசமுடன் அவர்தமப்பன் பக்குறுநன் முறைவிரித்தான்.

3 ஆங்கொன்றில்,
பள்ளிதனிற் பயிலுகின்ற பருவமுடைச் சிறுவர்பலர்
உள்ளனவாங் குறைகளைய உலகினுள எழுச்சிகொடு
வள்ளியயர் முருகனிடம் வரம்வேண்டல் உரைத்தனனே.

4 ஆங்கொன்றில்,
உள்ளத்தில் நகைவேண்டி உற்றவரைக் கிண்டல்செய்யும்
பள்ளிச்சேர் பருவத்தில் பாட்டியுடன் ஒருபேரன்
மெள்ளத்தான் புரிகிண்டல் மேன்மையினில் விரித்தனனே.

5 ஆங்கொன்றில்
ஓதுகின்ற சிறுவனவன் உயர்காதல் மிகக்கொண்டே
ஓதுகின்ற சிறுமியுடன் உயர்முருக நறவுண்டால்
போதுகின்ற மறப்பதனைப் புகன்றமுறை விரித்தனனே.

6 ஆங்கொன்றில்,
கற்றுள்ள ஒருசிறுவன் கல்லாத சிறுவனுக்கே [டைத்
உற்றுள்ள பொருட்பெருக்கால் உலகினுக்குச் செயுந்தொண
தெற்றெனவே தெளிவித்த திறத்தினைத்தான் விரித்தனனே.

7 ஆங்கொன்றில்,
காதலனாங் கணவனவன் காதலியாம் மனைவியுடன்
காதல்புரி மகவேண்டிக் காதலுடன் மயிலத்தாள்
ஈதன்முதற் செயல்புரியும் இனியசெயல் விரித்தனனே.

8 ஆங்கொன்றில்,
காதலர்கள் பெற்றெடுத்த கனியனைய தம்மகனும்
ஏதிலரின் மக்களுடன் இன்னுவற் கனிக்காக
வாதிட்டு மகிழ்வூட்டும் வகையினையும் விரித்தனனே.

9 ஆங்கொன்றில்

நறியகருங் குழலியரை நாடியெங்கும் மிகத்திரிந்து
வெறியமலர் மயிலத்தில் வேண்டிமகிழ்ந் தடைமுருகைச்
சிறுவர்தமைக் காக்கவெனச் சேவடிகள் வணங்கினால்,

-எனவொன்று, தனிச்சொல்

### சுரிதகம்

ஒன்பான் பாக்களை ஒருங்கு தொகுப்பின்
அன்பால் ஒருவர் செய்வன செய்யும்
ஒன்றும் அறியாக் குழவி நிலையும்,
யாதும் வினவும் ஆடல் நிலையும்,
புகட்டும் நீதி பொதிக்கும் உளத்துப்
பள்ளிக் கேகும் நிலையும், அவனில்
நகையை விரும்பும் அறிவு நிலையும்,
சிறந்த காதல் செய்யும் நிலையும்,
காதல கொண்ட காதலி யடைந்த
காத லுடன்தொண் டியற்று நிலையும்,
காதலிக் கேற்ற கன்னிய விளக்காம்
புதல்வற் பேற்றைப் போற்றுபு நிலையும்,
பெற்ற பிள்ளையின் பெருவிளை யாடல்
உற்று நோக்கி உண்மகிழ் வெய்தும்
நிலையும், அவனை நிச்சலுங் காக்க
மலையுறை முருகை மனமுற வேண்டும்
நிலையும், உலகில் நின்ற ஒருவன்
எய்துவன் என்ற இனிய கருத்தைப்
பெய்து வைத்தமை பெறப்படும் இனிதே
பெய்த கருத்தைப் பேரா சிரியன்
எய்தி முற்றும் இயற்று நூலுடன்
மன்பதை உலகில் மன்னுக
அன்பும் அருளும் அடைதரப் பெற்றே.

# முகவுரை

ஆயிர முகத்தாலகன்ற தாயினும் பாயிர மில்லது பனுவ லன்றா மாதலின், இந்நூற்குச் சிறுபாயிரமொன்று வரைதும். சென்ற கோடை விடுமுறைக்காலத்து, எங்கள் ஆதீனச் சீடர்களைப் பார்த்து வரற்காகக் கோயமுத்தூர் வட்டத்திற்குக் குடும்பத்துடன் சென்றிருந்தோம். அந்த உயர்திரு—ஆறுமுக முதலியாரவர்களால் சீர்திருத்தப்பெற்றுள்ள தாண்டாம்பாளையம் என்னும் ஊரில் யாங்கள் தங்கியிருந்த காலத்து எங்குழந்தை திரு-பேராசிரியனுக்குக் காய்ச்சலடித்து உடல்நலம் மிகக்குறைந்திருந்தது. அப்பொழுது யாம், எமது கடவுள் வணக்க காலத்து, மயிலை முருக! உன் திருமுன்பிற்கு நோய்தீர்ந்த நன் மகவுடன் வந்து உன்னருள் பெறுமாறு பணித்தியேல், யாம் உன்மேல் சின்னஞ் சிறுவர் செயலமைந்த பிள்ளைப்பாட்டைப்பாடிவணங்குகின்றேம்" என்று வேண்டினேமாக, மயிலை முருகின் மாணருளால் நோயும் தீர்ந்து, கோயமுத்தூர் வட்டமும் குறைவின்றிச் சென்றுவந்தேம். பின்னர் இப்பிள்ளைப் பாட்டைப்பாடி பார்த்திப புரட்டாசிக் கார்த்திகை விழாவன்று மயிலம் முருகன் செந்தமிழ்க் கழகத்து **ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் மகா சந்நிதானத்தின்** தலைமையின்கீழ் முருகனுக்கு ஏற்பித்துள்ளோம்.

இங்ஙனம்,

S. S. B. S. தமிழ்க்காலேஜ்
மயிலம் 15-10-'45

**திரு—அடிகளாசிரியன்,**
உதவித்தலைவன்.

# காப்பு

உ

வள்ளியைப் போற்றுதும் வள்ளியைப் போற்றுதும்
உள்ளியது தருஉம் ஒருதாய் ஆதலின்
பிள்ளையின் பாட்டுப் பெரிதுநனி சிறக்கென
வள்ளியைப் போற்றுதும் வள்ளியைப் போற்றுதும்
என் எனில் ?
வள்ளி தோன்றின் வடிவே லெடுத்துக்
கள்ள முருகன் காதலொடு தோன்றும்
கள்ள முருகன் காதலொடு தோன்றின்
வெள்ளைக் கோட்டு வியன்கரி தோன்றும்
வெள்ளைக் கோட்டு வியன்கரி தோன்றின்
உள்ளியது முடிக்கும்; உறுபயன் வருமே.

குறிப்புரை;— *தாயை வணங்கப் பிள்ளைப்பாட்டு சிறக்கும் என்று கருத்து. என் எனில்; ஒரு நாலிரு யானைமுகக்கடவுளை யன்றோ காப்பாகக்கூறுவர்; நீர் வள்ளித்தாயைக் காப்பாகக் கூறு தற்குக்காரண மென்னையோ எனில்.*

உ

முருகன் துணை

# பிள்ளைப்பாட்டு

## 1.

---

கொச்சகம் தரவு

உலகமெலாம் மகிழ்வடைய உமைமணந்த பெருமானின்
இலகுவிழி தனிற்றோன்றி இமவரையச் சரவணத்தில்
சேயான திருமுருகன் சிலம்பதனுள் மிகச்சிறந்த
வாயான திருமயில வரைவிழவிற் களிப்பதற்கா
நெடுந்தடக்கை ஆடவரும் நெடுவேல்போற் கண்ணியருங்
குடங்கையினால் மகத்தழுவிக் குழுக்குழுவாய் வந்தெய்த

தாழிசை

ஆங்கொருசேய் திருமுருகன் அணிக்கோயில் முடிகண்டே
பூந்தளிர்க்கை குவித்திடவப் புதுமைதனைக் கண்டோர்கள்
திருமுருகன் திருவருளைத் தேர்ந்தெண்ணிக் கொண்டாடி
ஒருமுருகா! எனுமொழிதான் உலகமெல்லாம் ஒலித்திடுமே. 1

மகவிலார் மகப்பொலிய மகிழ்முருகன் திருமுன்றில்
புகவிடலும் அயமகவு புழுதிபட வீழ்ந்தெழுந்து
முளரிமலர்க் கைகுவித்து முன்னிற்கும் முறைகண்டோர்
வளர்முருகா! எனுமோதை வானமெல்லாம் நிறைவுறுமே. 2

நோயப்பிழைத்த நன்மகவை நுவல்முருகன் கோயில்விட
தாய்த்தவழ்ந்து வலம்வருமோர் தகுநிலையைக் கண்டோர்கள்
திருமுருகா! என்மொழிதான் தேறுநர் நெஞ்சகத்தும்
வருமுருவாய் என்ஞான்றும் வளர்ந்தோங்கும் வனப்பிற்றே 3

"செம்மலரைக் கையேந்திச் செம்பாவை வந்ததென"
கைம்மலரில் மகவேந்திக் காரிகையார் புகுதலும்
மலைமகளார் திருமகவே! வாழியர்பல் லியாண்டென்றே
புலவர்மொழி புனைவுரைதான் பொழிலேழும் பொலிவுறுமே.

எனவாங்கு தனிச்சொல்

### சுரிதகம்

இன்னபல் லொலியுறு விழவைப்
பன்னுதல் முடியுங்கொல் பார்த்துணரின் அல்லதை.

### குறிப்புரை

சிலம்பதனுள் - மலைகளுள்; வாயான - முகம்போன்ற;

## பிள்ளைப்பாட்டு
## 2

கொச்சகம்  தரவு

துள்ளிக் குதித்தோடும் தோமில் வனப்புடைய
வெள்ளை இளங்காளை வீறுகொளப் பூட்டி
பல்வகைய பண்டம் படைத்தபொலன் வண்டியில்
ஒல்வகையில் ஒத்த உயிருடம்பே ஒக்கின்ற
காதற் கொடியாரும் காமனை ஒத்தாரும்
ஓதுஞ் சிறுமகார் உடன்சூழ மேலேறி
ஓங்கு மயில உயர்வரையைக் கண்காணத்
தேங்கு மகிழ்வால் திருவிழவுக் காணவர

### தாழிசை

ஆங்கொருசேய்,
மயில வரையுள் மனமகிழக் காண்பதெது ?
மயிலையோ? என்ன மகிழ்தந்தை தானுரைக்கும்
பொன்னா லியன்ற புதுமயிலும் பேரின்மயிலில்
தன்னே ரிலாத தகைமுருகுங் காண்பமென.

ஆங்கொருசேய்,
முருகன்யார்? என்றே மொழிய அவன்றந்தை
என்றும் இளையன்; இயம்புபெருந் தெய்வம்;
மன்றல் அழகன்; மலைவாழ் சிவன்குழந்தை
என்றே உரைத்தான் இளஞ்சேய் உளங்கொளவே.

ஆங்கொருசேய்,
ஆன்பால் முருகன் அருந்துமோ? என்றுரைக்க
வான்பால் விளங்கும் வளரொளிப்பால் தானுண்டு
உலகம் உவப்ப ஒளிவாய்ந்து நிற்குமென

ஆங்கொருசேய்,
கோற்கைப் பிடித்துக் குதிக்கும்? முருகெனவே
வேற்கைப் பிடித்து வீணர்களைத் தானடித்து
வெறியார் களத்தில் விளங்கிக் குதிக்குமென

ஆங்கொருசேய்,
குழவான்க ளோடே குதிக்கும்? முருகெனவே
ஒன்பான் குழவாரி உண்டே விளையாட
இன்பா லவரோ டிசைந்து குதிக்குமென

ஆங்கொருசேய்,
பாப்பா வினத்தோடு பயிலும்? முருகெனவே
வேந்தன் திருமகளும் வேடன் சிறுமகளும்
பாப்பாவே யாகப் பயிலும் முருகெனவே

ஆங்கொருசேய்,
பள்ளிக்குச் சென்று படிக்கும்? முருகெனவே
நான்முகன் பள்ளி நணுகி அவன்றலையை
ஓமென்று குட்டி உரைக்குங் கலைகளென

அவணிருந்த தனிச்சோல்

சுரிதகம்

எல்லா மழவும் கல்லென நகைக்கத்
துள்ளிச் சென்றன தூவெண் காளைகள்.

## குறிப்புரை

தோமில்-குற்றமில்லாத; மன்றல் அழகன்-மணத்தோடு கூடிய அழகையுடையவன்; ஆன்பால்-பசுவின்பால். வான்பால்-வானிடத்தே. வளரொளிப்பால்-ஆகாயத்தில் விளங்கும்

கார்த்திகை முதலான ஆறு நட்சத்திரமங்கையர் ஊட்டிய பால். விணர்கள்-சூரபன்மன் முதலியோர். வெறியார்களன்-முருகாகிய தெய்வமேறி யாடுதலைச்செய்ய வகுத்துக்கொண்ட களம். குழவான்-சிறுபயல்கள். குழவான் என்பது உலக வழக்கில் கொளவாரி என்றுவழங்குகின்றது. ஒன்பான் குழவாரி; செங்குந்தர் மரபிற்கு முதல்வரான வீரவாகு தேவர் முதலான ஒன்பதின்மர்; வேந்தன் திருமகள்-தெய்வயானை. எல்லா மழவும்-எல்லாப் பிள்ளைகளும்.

## பிள்ளைப்பாட்டு

## 3.

கொச்சகம் தரவு

பாற்றளிவாய்ச் சிறுமலர்க்கைப் பரந்தசிறு மயிர்த்தலைய
சாற்றுநகைச் சிறுவரினம் சாறுகொள்நன் மயிலவரைத்
தோற்றுமருட டிருமுருகின் துலங்குறுமுன் வங்தெய்தி
சேற்றுவளர் மரைமுகையிற் சிவணிருகைக் குவிந்தவராய்
வேற்றிருந்த விடங்குறுமைக வேளடியை அகத்தெண்ணி
ஏற்றவரம் ஈகென்றே இனிதிறைஞ்சி வேண்டுவரே.

தாழிசை

1 ஆங்கொருசேய்,
சொல்லாரும் என்போலத் துணைசிறுவர் கல்விபெற
எல்லாரும் இன்புறச்செய் எம்வேல ! இயற்றெனுமே.

2 ஆங்கொருசேய்,
வறியவரும் செல்வர்களும் வையகத்தி லொன்றுக
மறிவிழிய வள்ளியினல் மகிழ்முருக ! செய்யெனுமே.

3 ஆங்கொருசேய்,
பிறர்வாழ யான்வாழும் பெற்றியெமக் களித்திடுகச்
சுரர்வாழ வாழுமொரு தோகையயிற் சேயெனுமே.

4 ஆங்கொருசேய்
உலகிலுள்ள மழ்வினத்திற் கோரஞரும் வாராமல்
நிலவுமுடிச் சிவன்மழவே! நிச்சலும்நீ நிகழ்த்தெனுமே.

5 ஆங்கொருசேய்,
என்னாட்டைப் பிறர்வருத்தின் இப்பிறரை அழித்திடுகப்
பொன்னாடடைப் புரந்திட்டுப் பொலிவேற்சேய்! என்றிடுமே.

6 ஆங்கொருசேய்,
தமிழ்க்குழவி உலகமெலாம் தவழ்ந்தோடச் செயல்வேண்டும்
தமிழ்க்கூறிக் குறுமுனிக்குத் தண்ணளிசெய் முருகெனுமே.

7 ஆங்கொருசேய்,
எல்லாரும் ஓரினத்தார் எனுநினைவை ஈந்திடுக
அல்லாரும் வேடரொடு அன்றுறைசேய்! என்றிடுமே.

8 ஆங்கொருசேய்,
எம்நாட்டுப் பொருள்களையே எம்மிளைஞர் கொள்ளமலை
வெம்நாட்டு மயில்முருக! விளங்கவருள் செய்யெனுமே.

எனவாங்கு தனிச்சொல்

சுரிதகம்

மண்ணமர் சிறுவர் மயிலை முருகெனும்
விண்ணமர் சேயின் வியன்திரு முன்பில்
குழீஇ வரங்கொள்வ ரென்றும்
எழீஇ விளங்கும் இளமதி போன்றே.

குறிப்பு

சாறுகொள்-விழாக்கொள்ளும். வேல்திருந்த விளங்குறுகை-வேலானது உலகுதிருந்த விளங்கும் கை. மழை

முகை-தாமரையரும்பு. சொல்லாரும் - கல்வி அமையப் பெற்ற. ஓரணுரும்-ஒரு துன்பமும். நிச்சலும்-தினமும். குறுமுனி - அகத்திய முனி. அல்லாரும் வேடர் இருள் போல் நிறம் படைத்த வேடர். அல்லாரும் வேடரொடு அன்றுறைசேய் என்றதின் கருத்து- நீ செவ்வேளாயிருந்தும் நிறத்தால் வேற்றுமை காட்டாது கருநிறத்தையுடைய வேட ரொடு தங்கினை என்பதாம். மலைவெம்நாட்டு மயில் முருக என்றதின் கருத்து - மலைமகள் மகனாய், மலைவாழ் சிவன் குழந்தையாய் இமவரைச் சாரலில் மகவாய்க் காட்சியளித்தநீ மலையையே உரிமையான இடமாகக்கொண்டாய்; மலைக்கருப் பொருளாகிய மயிலையே ஊர்தியாகக்கொண்டாய் என்றபடி.

## பிள்ளைப்பாட்டு

## 4

### (1) பாட்டியும் (2) பேரனும்

### உறழ்கலி

1 மயிலை வரைப்போகி மன்னும் விழாநோக்கி
மயிலை முருகனிடம் மனங்கொ ளெமக்காக
எவ்வரம் வேண்டினை? எப்பேர! என்றாளே
வெவ்வாய் முதுகோ கிழவள்.

2 விரும்பிக்கேள்!
மெல்லும் இலையும் மேலே ஒருபாக்கும்
அல்லும் பகலும் அகலாமல் நீபெற்றுக்
கண்ட இடமெல்லாங் காறி உமிழாமல்
இல்லின் புறத்தொருசார் ஏகியே துப்பற்குக்
காலில் நடையும் கைவாய்ச் சிறுகோலும்
கைக்கோல் இளஞ்சேய்! கருதிநீ ஈகென்றேன்
மெய்க்கோல மாகவே யான்.

உன்மகள் பெற்ற ஒளிசே ரிளங்கொடியைக்
கண்ணாலம் பண்ணியான் கைகோத்து உன்முன்னே
விண்ணோரைப் போல விளங்கியே நின்றக்கால்
கண்டு மகிழ்ந்து கனவுடலம் பூரிக்கப்
பன்னிரண்டு கண்ணு! பரிவுகூர் பாட்டிக்கு
என்னிரண்டு கண்போல் இலங்கக் கொடுவென்றேன்
இன்னும் உளதோ வரம்?

1 வரம் உண்டு
பள்ளிக்குச் சென்று படித்துச் சிறுருடனே
துள்ளிக் குதித்துத் துயர்தீர நீவந்தால்
வாயிற் படியில் வருகையை நேர்நோக்கி
உட்கார்ந் திருக்கும் உன்பாட்டற் காகநீ
என்பெற் றனைசொல் வரம்?

2 வரம் உண்டு
விருந்தின் கதையை விடியளவுஞ் சொல்லத்
திருந்துவாய் பெற்றுத் தினைப்புனத்து வள்ளிபோல்
நீயுஞ் சிறக்க நெடுங்களிறு முன்னின்ற
மாயக் கிழவன் நிகர்ப்ப மகிழ்வோடு
வயளம் பாட்டன் இருக்க இவனொன்று
முருகனை வேண்டினே னியான்
இதுகேட்டுக்
கல்லென்று யாரும் நகைக்கஅப் பாட்டி
சொல்லாடல் நீங்கினள் மன்.

## குறிப்புரை

இங்கே பாட்டி என்றது தந்தையைப் பெற்றவளை. அல்லும் - இரவும். மெய்க்கோலமாகவே உண்மையாகவே. உன்மகள் பெற்ற ஒளிசே ரிளங்கொடி -அத்தைமகள். பாட்டியின் மகள் பேரனுக்கு அத்தையாக வேண்டுதலின். நீ வள்ளி போல் சிறக்க பாட்டன் திருந்து வாய்பெற்று மாயக்கிழவன்

நிகர்ப்ப இவண் இருக்க என்று கூட்டுக, விருந்தின்கதை-புதுக்கதை. பேரன்களுக்குக் கதை சொல்லும் வழக்கம் பாட்டனிடம் உண்டு.

## பிள்ளைப்பாட்டு
## 5

1 ஓதுஞ் சிறுமியும் 2 ஓதுஞ் சிறுவனும்

உறழ்கலி

1 ஏடா என்தோழ! எங்ஙன்னீ சென்றாயால்
மூடா துரைப்பாய் முனம்

2 உரைப்பேன் யான்
மயிலவரைச் சென்றேன் மயில்மேல் இளங்கடவுள்
சிவப்புங் கருப்புஞ் செறிபெண்க ளோடே
உவப்பா யுலவக் கண்டேன்

1 கண்டென் னடைந்தனை? நீ!

2 கண்ணுங் களியடைந்த கல்போற் கடுநெஞ்சம்
உண்ணும்நெய் போல வுருகியே ஓடிற்றே
என்னென் றுரைப்பே னிவண்?

1 ஓஓ! கண்ணின் களியில் கடுநெஞ்ச நெய்யூற்றின்
உண்ணற் கினிதாகு மன்

2 தக்கது
கண்ணின் களியில் கடுநெஞ்ச் நெய்யூற்றின்
நண்ணும் முருக நறவைக் கலந்துண்டால்
விண்ணோ ரமிழ்தமும் வேண்டற்பா டாகுமோ
திண்ணம் இதுவே தெளி

2 திறவங்காண்
முருக நறவை முறையாக உண்டால்
உருகும் உளமும் உரையுங் குழறும்
செருகும் விழியும் சிலிர்க்கும் உடம்பும்
அருவிபோல் கண்ணீரும் ஓடும் உனையன்றி
உருவும் உணர்வும் உலகும் மறப்பன்
"மருவுங் களிபோல" யான்.

### குறிப்புரை

சிவப்பான பெண் - தெய்வயானை. கருப்பான பெண்-வள்ளி. தான் இச்சிறுமியோடு சேர்ந்து கொண்டு உலாவு தலைப்போல இளங்கடவுளும் பெண்களோடு உவப்பாயுல கண்டேன் என்றான். திறவம் - தகுதி. உனையன்றி- என்தோழியாகிய உன்னையே அல்லாமல். உருவும்- உடம்பும்.

## பிள்ளைப்பாட்டு
## 6

1 கல்லாச் செல்வச் சிறுவனும்
2 கற்ற செல்வமில் சிறுவனும்

### உறழ்கலி

1 உடம்பு வியர்க்க உயிர்ப்போட ஏடா!
திடம்படச் சென்ற தெவண்?

நெருநல்;
இன்றமிழ் நாளும் இசைக்கு மயிலத்துக்
குன்றெறிந்த வேலன் குரைகழல் கும்பிடற்காச்
சென்றேன் வணங்கிச் செறிந்தேன் அவனடியைப்
இன்றே இவண்வந் தனன்

1 ஏன்;!
கடவுள் கடவுள் என்கதறி வீணே
"மடவனைப் போல" மயங்கித் திரிவாய்
கடவுளைக் காட்டுவை யோ?

2 காட்டுவன்;
மடங்கொள் மனத்தாய்!மடம்நீங்கிக் கேட்பாய்
உடம்பை யியக்கும் உயிர்காண லாகா
உயிரை நடத்தும் ஒருவன் கடவுள்
"கடவுளைக் காட்டெனில்" கண்ணால் உணரக்
கடவம்? கருத்தா லுணர்.

வந்தும் இருந்தும் வழங்க விழுந்துலகு
நந்தும் முறையை நவைதீர ஆய்ந்தக்கால்,
முந்து வினைக்கு முதல் வேண்டும்; வேண்டுமே
இந்த வுலகிற் கிறை.

1 அஃதொக்கும்;
பல்பெயர் வண்ணம் பலவாம் வடிவோடு
பல்லோர் வணங்கும் பலவாங் கடவுளெனில்
எல்லாங் கடவு ளரோ?

2 இறந்தபல் காலத் திடந்தொறும் வாழ்ந்து
அறந்தரு வாய்மை அறிவான்ற பல்லோர்
கடவுள் நெறியைக் கருத்தா லுணர்ந்து
மடவரும் தேர்ந்து மனங்கொள்ளச் செய்தார்
கடவுள் வடிவம் பல.

1 அஃதாயின்;
சாலப் பொருளிற் சமைந்த திருக்கோயிலும்
ஏலும் பணியும் இயைந்ததிரு வாடையும்
பாலும் இளந்தயிரும் பச்சரிசிப் பொங்கலும்
ஏலக் கடவுட்கு ஈதலும் வீணன்றோ?
மாலுற்றாய்! மாயந் தெளி!

மாலுமேறன;
செல்வச் செருக்கில் செறிந்து அறிவிழந்த
கல்லா இளைஞர்! கருத்தூன்றிக் கேளித்தை
கடவுட் பொருட்டால் கலைவல்லார் செய்வ
மடவத்தை நீக்கி மனந்தூய வாக்கி
அன்பும் அருளும் அகம்வழியச் செய்து
துன்பத்தை நீக்கித் "தொலைவில் பெருங்கடல்போல்"
இன்பத்தை ஈயும் இவண்.

இன்னுங்கேள்;
பெருநகை வாய்ந்த "பேய்போன்ற" செல்வர்
உறுநகை வாய்க்க உயர்தெய்வம் பேணிப்
பொன்னும் பொருளும் பிறவும் புகுத்தி
உன்னுங் கடவுள் நெறியை வடுவிழைத்துச்
சின்னம் படுத்தின ரால்;
கண்ணாலம் என்றும் பிறவென்றுஞ் செல்வமெலாம்
ஆடும் கூத்திக்கும் அறிவழியக் கண்காட்டிப்
பாடும் பாத்திக்கும் பந்தர்ப் பணிதிக்கும்
உண்ணும் உணவிற்கும் உடுக்கின்ற கூறைக்கும்
எம்போன்ற ஏழையர் எல்லும் இரவெல்லாம்
உம்போன்ற சோம்பர் உயர உழைத்திட்ட
செல்வங்களெல்லாம் செலவழிப்ப ரித்தால்
காம வெகுளி மயக்கங்கள் தோன்ற
ஏம வுலகம் இடர்க்கடல்வாய் வீழ்ந்து
துன்பம் அடையுமித் துன்பத்தை எண்ணாது
இன்பம் இகழ்வ தெவன்?
செல்வச் செழுங்கள் செருக்கரில் மாழாந்து
ஒல்லும் பிறர்க்கு உறுகண் பலவியற்றிச்
"செய்வ தறிகலாச் செல்வர்தம் மால்போல்"
உண்டோ? விலக்கு நவை.

1 மால்தீர்ந்து செய்வ தெவன்?

2 நாட்டுச் சிறார்க்கு நலந்தோற்று பள்ளியும்
ஊட்டுப் புரையும் உயர்ந்த தொழிற்சாலையும்

வேட்ட பெருவழியும் வியன்கோய்நீர் சாலையும்
கேட்டலும் நந்நூல் கிளத்தல் இவையியற்றி
நந்நூல் வெளியிடலும் நற்கழகம தோற்றுதலும்
முந்நீர்க் கடல்போல் மூழங்கேரி தோண்டுதலும்
கூவல் அணைக்கால் குளங்கள் குயிற்றிடலும்
தெய்வ முருகைத் திறம்படப் போற்றுதலும்
செய்வன வாகுந் தெளி.

## குறிப்புரை

நெருநல் - நேற்று. ஏஎ என்றது இகழ்ச்சிக் குறிப்பு. உடம்பை—கருத்தாலுணர் என்றதின் கருத்து - உலகத்துப் பொருள்களெல்லாம் பொறியால் உணரத்தக்கனவும் கருத்தாலுணரத்தக்கனவும் என்று இருபகுப்புடையன. உடம்பையியக்கும் உயிரோ கட்பொறியால் காணலாகாது கருத்தால் தான் காணமுடியும்; அங்ஙனமிருக்க, அவ்வுயிரை நடாத்துகின்ற, உயிரினும் நுண்ணியஞான கடவுளைக் கட்பொறி முதலானவைகளால் காட்ட முடியுமோ? கருத்தினால் உணர்க என்றதாம்.

வந்தும் இருந்தும் என்பது கருத்துணரக் காட்டுதல். கந்தும் முறை - அழியும் முறை. அஃதொக்கும்......கடவுளரோ என்றதின் கருதது இந்த உலகங்களுக்கு ஒரு முதல்வன் உண்டென்பது ஒக்கும், பல பெயர் முதலானவைகளைப் பெற்றுக் கடவுள் பலராய் விளங்கக் காண்டும். பலரோ கடவுள் என்றபடி. இறந்த......பல என்றதின் கருத்து கடவுள் பல வல்ல, காலத்தாலும் இடத்தாலும் பலரான சான்றோர் கருத்தாலுணர்ந்த கடவுள் நெறியை மடவரும் மனங்கொள்ளப் பெயர் வடிவம் கற்பித்து காட்டினார்கள்; சான்றோர் பலராதலின் அவர்கண்ட கடவுள் நெறியும் பலவாயின, கடவுளும் பலவாயின என்றபடி.

மாழாந்து - மயங்கி
உறுகண் - துன்பம்
நவை - குற்றம்

ஊட்டுப்புரை - உணவு விடுதி
பெருவழி - பாதை (Road)
நோய்தீர்சாலை; மருத்துவரில்லம் (Hospital)
கூவல் - கிணறு

## பிள்ளைப்பாட்டு
## 7

### கலிவெண்பா

செல்வப் பெருங்குடிக்குச் சேயொன்று வேண்டுமென
ஒல்கும் இடையாரும் ஓங்கும் கொடையாரும்
அல்லும் பகலும் அழகார் முருகனடி
மல்லல் மனத்து மலர நினைந்தக்கால்
மயிலை முருகன் மனங்கொ ளருட்பெருக்கால்
உலகம் உவப்ப ஒருசேய் உதித்திடுமால்
ஆரல் வருநாள் அவ்வேள் அடிவணங்க
வருவார் மயிலம் வளநீர் தலைமூழ்கி
உப்புங் கரும்பின் உயர்கட் டியும்பெற்றே
குளத்தி லெறிந்துங் குடுமிமழித் திட்டும்
அகமும் புறமும் அணைந்தநற் றூய்மையராய்
வரைவலம் வந்தும் வளக்கோயில் சூழ்ந்தனராய்
செல்வச் சிறுமகவைச் சேய்முன் கிடத்தினராய்
முருகடி போற்றி முதிரருள் பெற்றனராய்ப்
**பாலய ஆசானைப்** பரவி வணங்கினராய்
ஊட்டுப் புரைக்கண் உவந்து புகுந்தனராய்
முருகன் அடியவரை முன்னி அழைத்தனராய்
அறுசுவை உண்டி அவர்மிசைய ஊட்டினராய்
ஒக்கலும் தாமும் உவந்து அயின்றனராய்
ஒன்றும் முருகன் உலாப்போதல் கண்டனராய்
''செயற்பால செய்து சிறப்பார் உளம்போல''
குன்றும் உளம்மகிழ, ஊர்புகுவார் என்பவே
ஒன்றமர்ந் தோன் நல்லருளைக்கொண்டு.

ஒககல - பநதுககள
அயின்றனராய் - உண்டனராய்.

## பிள்ளைப்பாட்டு 8.

**ஊர்மன்றுள் நாவல் மரத்தடிச் சிறுவர் 1, 2, 3.**

**உறழ்கலி.**

1 ஏ எ ! ;
என்றன் பழத்தை எடுத்தாய் எவன்கொல் ?
மன்றத்துக் கள்வனோ ? நீ

2 கள்வனும் அல்லேன் கனியெடுத்தே னல்லேன்
உன்னும் மயிலை உறுமுருகன் மேலாணை
எள்ளல் ! எனைநீ இவண்

1 சூழ்ந்தவர் சொல்லீர் ! பழமெடுத்த கள்வன்யார் ?
தாழ்ந்தவர் செய்வர் இது

3 மற்றொருவ னல்லன் பனங்கொ ளவனுண்டான்
சொற்றிவண் நீ எம்மைச் சொலல் !

1 ஏட ! பழமெடுத்தும் என்றும் இளையோன்மேல்
வாட பழிச்சூள் வகுத்தாய் மிகமன்ற
நாடும் முருகன் நவைசெயின் என்னுங்கொல் ?
ஓடுங் களவா வுரை ?

தந்தைசெ சவுணா தருவாா பழம்மனறு
முந்தை மயிலில் முடுகித் தரைசுற்றி
வந்த முருகன் வகையுறக் காயுங்கொல்?
இந்தப் பழத்திற் கிவண்.

### குறிப்புரை

என்றும் இளையோன் - முருகன். பழிச்சூள் - பழிக்கத் தக்க பொய்ச்சத்தியம். நவைசெயின் - தீங்கைச் செய்தால். களவா - கள்வனே. குதட்டினேன் - குதப்பினேன். (வாயிலிட்டுக்குதப்புதல்) முடுகி - விரைந்து.

---

## பிள்ளைப்பாட்டு
## 9

### கலிவெண்பா.

காலிற் கழலொலிக்கக் கையிற் றொடிமின்ன
வேலின் நடுவை விளங்கப் பிடித்தேந்தி
உலகம் உவப்ப உயர்பயின்மே லேறி
"நிலவு பொழிதிங்கள் நின்று நிமிர்ந்ததென"
தெய்வ இளவனப்புத் தேம்பாய் முகம்பொலிய
வானுலக முட்டும் வரைமயிலம் வந்தெய்தி
வானுலக நங்கையும் வரையுலக வஞ்சியும்
இருபாற் பொலிய இருப்பாய் இளைஞ?
சின்னஞ் சிறுவர் சிறந்தமனப் பூவில்
முருகாய் விளங்கி முன்னருட்டேன் தோற்றித்
திருகா உள்ளமும் தெவிட்டாஇன் சொல்லும்

கருகா உடம்பும் கலையாகும் பொன்னும்
ஒருகால் உனைமறவா உள்ளத்தோ டயின்
இருகால் மறவேன் இனி.

### குறிப்புரை

தேம்பாய் முகம் - மணம் பரவும் முகம். வானுலக நங்கை - தெய்வயானை. வரையுலக வஞ்சி - வள்ளி. திருகா உளம் - மாறுபடாத நெஞ்சு. கருகா உடம்பு பசித்தீயாலும் காமத்தீயாலும் தீயாத உடம்பும். கலையாகும் பொன் - கல்விச் செல்வம். ஒருகாலும் உனைமறவா என்று உம்மை விரிக்க.

### தனியன்.

மருளே கொண்டு மனங்கலங்கி
மலினம் நிறைந்து "மழையோடு
இருளே கொண்ட புயல்போல"
இருக்கும் மனிதர் தமக்கெல்லாம்
"தெருளே கொண்ட அகம்போலத்"
திருமா முருகன் திருவடியாம்
அருளே நின்று துணைபுரியும்
அவன்றாள் தொழுமின் உலகீரே!

### குறிப்புரை.

இருளைப் போன்ற மருளையும் புயல்போன்ற மனக்கலக்கத்தையும் மழைபோன்ற மலினத்தையும் உடைய மக்கட்கெல்லாம் என்று கூட்டுக. தெருளே கொண்ட அகமாவது எத்தகைய புயற்காற்று வீசினும் எத்தகைய பெருமழை பொழியினும் சிறிதும் தீங்கு நேராது என்று உள்ளிருப்பார் கருதத் தக்க வீடு.

ஸ்ரீ வாணி விலாசம் பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்,
S. A. 61—C. 250—181245